Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.90/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW–11** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

Name : **டாக்டர் சாகுல் ஹமீது**

Father Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2024.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.08.2019 அன்று காலை 11.00 மணியளவில் நான் அதே மருத்துவமனையில் உதவி மருத்துவராக அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது ராஜா என்பவரை சுயநினைவு இல்லாத நிலையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக கொண்டு வந்தார்கள். பொதுமக்கள் போன் மூலம் தகவல் சொன்னதன்பேரில் அந்த காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு

கொண்டுவந்தததாக ஆம்புலன்ஸ் ஓட்டுநர் கூறினார். காயம்பட்டவரை ஜெகன் தியேட்டருக்கு அருகில் இருந்து காலை 10.30 மணிக்கு கொண்டுவந்ததாக ஆம்புலன்ஸ் ஓட்டுநர் என்னிடம் சொன்னார். நான் அந்த காயம்பட்ட நபரை பரிசோதித்தபோது அவருக்கு இடதுபக்க முதுகுக்கு கீழ் ஒரு குத்துக்காயம் இருந்தது. அதனுடைய அளவு 2 X 1/2 X 5 செமீ. ஆக இருந்தது. மேலும் நோயாளி சுயநினைவு இன்றி இருந்தார். அவருடைய இரத்த அழுத்தம் பதிவு செய்ய முடியாதநிலையில் இருந்தது. நாடித்துடிப்பு 124 Per Minute ஆக இருந்தது. நான் அவரை உள்நோயாளியாக அனுமதித்து முதலுதவி சிகிச்சை செய்தேன். மேலும் அறுவைசிகிச்சை நிபுணருடைய கருத்துரையை கேட்டேன். அவருடைய கருத்துரையின் படி காயத்தின் தன்மையை அறிந்து அன்றைய தினம் எனக்குப் பின் அடுத்த Shift–ல் பணிக்கு வந்த அவசர சிகிச்சை பிரிவு மருத்துவர் நோயாளியை மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இது தொடர்பாக நான் சிகிச்சை அளித்தபோது விபத்து பதிவேடு பதிவு செய்தேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7/அ.சா.11**. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கத்தியால் குத்தினால் மேற்சொன்ன நபருக்கு ஏற்பட்டிருந்ததுமாதிரியான குத்துக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. (சா.பொ.3 கத்தியைப் பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்.) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இந்த நோயாளி தொடர்பாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. 19.08.2019 அன்று போலிசார் என்னை விசாரித்தனர். நான் முதலுதவி சிகிச்சை செய்து கொண்டிருந்தபோதே காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததன்பேரில் போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தனர். மேற்சொன்ன நோயாளியின் பெயருக்கு முன்பாக கேள்விக்குறி போட்டுவிட்டு பெயருக்கு பின்னால் Unknown என்று நான் விபத்து பதிவேட்டில் எழுதியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். ராஜா என்ற பெயரை 108 ஆம்புலன்ஸில் வந்த உதவியாளர் சொன்னார். அவர் சொன்னது ஊர்ஜிதம் இல்லாததாக இருந்ததால் நான் கேள்விக்குறியை குறிப்பிட்டு சந்தேகத்தின்பேரில் Unknown என்று எழுதினேன். காயம்பட்டவரை ஜெகன் தியேட்டருக்கு அருகில் இருந்து காலை 10.30 மணிக்கு கொண்டுவந்ததாக

ஆம்புலன்ஸ் ஓட்டுநர் என்னிடம் சொன்னார். இந்த நோயாளிக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவசர சிகிச்சை பிரிவுக்கு வரும் நபரை பரிசோதனை செய்துவிட்டு நோயின் தன்மைக்கு ஏற்ப அவரை அவசர சிகிச்சை பிரிவிலோ அல்லது ICU பிரிவிலோ அல்லது சாதாரண வார்டிலோ உள்நோயாளியாக அனுமதிப்போம். நான் கொண்டுவந்துள்ள Case Sheet-ன் படி இந்த நோயாளி காலை 11.00 மணியிலிருந்து நான்கு மணிநேரம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எல்லா வசதிகளும் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. இங்கு Super Specialty வசதி இல்லை. நான் பரிசோதித்தபோது இந்த நோயாளி மது அருந்தியிருந்ததாக எந்தவித அறிகுறியும் காணப்படவில்லை. நான் பரிசோதித்துவிட்டு இந்த நோயாளிக்கு முதலுதவி சிகிச்சை செய்து அறுவை சிகிச்சை நிபுணரிடம் கருத்துரை கேட்டேன். அதன் பிறகு அவருக்கு நான் வேறு சிகிச்சை செய்யவில்லை. நான் என் பணிநேரம் முடிந்தவுடன் சென்றுவிட்டேன். Case Sheet-ஐ நான் Open செய்யவில்லை. Case Sheet-லும் கேள்விக்குறி போட்டு ராஜா என எழுதப்பட்டு Unknown என எழுதப்பட்டுள்ளது என்றும், பிறகு அது கோடிட்டு அடிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். இந்த நபருக்கு நான்கு மணிநேரத்தில் முதலுதவியோடு சேர்த்து முறையான சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் இந்த நபரை காப்பாற்றியிருக்க முடியும் என்று சொன்னால் அதை என்னால் உறுதியாக கூறமுடியாது. ஏனென்றால் நான் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருந்ததால் அறுவை சிகிச்சை நிபுணரிடம் கருத்தாய்வு கேட்டேன். அவரால்தான் இதற்கு சரியான பதில் சொல்ல முடியும். நான் MD (பொது மருத்துவம்) படித்துள்ளேன். கத்திக்குத்து பட்டுவரும் நபருக்கு என்னால் காயத்தின் தன்மையைக்கண்டு முறையான சிகிச்சையை கொடுக்க முடியும் என்று சொன்னால் என்னால் முதலுதவி சிகிச்சை மட்டும்தான் செய்யமுடியும். நான் அறுவை சிகிச்சை சம்மந்தமாக படிக்கவில்லை. இந்த நோயாளிக்கு ஏற்பட்டிருந்த காயத்தின் அளவு 2 X ½ X 5 செமீ. இந்த காயத்திற்கு நானே மருத்துவம் பார்த்திருக்க முடியும் என்று சொன்னால் காயத்தின் ஆழஅளவு 5 செமீ அளவு இருந்ததால் நான் சிகிச்சை அளிக்க முடியாது. அறுவை சிகிச்சை நிபுணரின் கருத்துரையை நான் பெற்றேன். கருத்துரையை பெற்ற பிறகு இந்த நோயாளிக்கு சிகிச்சை செய்யப்பட்டது. கருத்துரையை பெற்ற பிறகு

உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய முடியும் என்றும், எங்கள் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரிதான். அறுவை சிகிச்சை நிபுணர் இந்த நோயாளிக்கு உள்உறுப்புகளில் ஏதேனும் காயம் இருக்கிறதா என்று கண்டறிய வயிற்றில் சிடி ஸ்கேன் எடுக்க பரிந்துரைத்தார். எங்கள் மருத்துவமனையில் சிடி ஸ்கேன் வசதி இருக்கிறது. அவசர சிகிச்சை பிரிவிலிருந்து இந்த நோயாளியை வார்டுக்கு அனுப்பிய பிறகு வார்டு மருத்துவர்தான் நோயாளிக்கு என்னவிதமான சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதை உறுதி செய்வார் என்று சொன்னால் சரிதான். வார்டில் இந்த நோயாளிக்கு சரியான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று சொன்னால் அதை என்னால் சொல்ல முடியாது. அதை அந்த வார்டு அறுவை சிகிச்சை மருத்துவர்தான் சொல்ல வேண்டும். என்னால் சொல்ல முடியும் என்றும், சில காரணங்களால் நான் பதில் சொல்ல தயங்குகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கொண்டு வந்துள்ள Case Sheet போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கூர்மையான முனை உடைய எந்த ஆயுதத்தாலோ அல்லது பொருட்களாலோ அல்லது அத்தகைய பொருட்களின் மீது விழுவதாலோ இந்த நபருக்கு ஏற்பட்டிருந்தது மாதிரியான காயம் ஏற்படலாம் என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**